பலூன் வியாபாரி சம்பந்தப்பட்ட விவகாரம்

# விசாரணை அறிக்கைகள்
# டிபிபி தரப்பிடம் ஒப்படைப்பு

கோலாலம்பூர், ஏப். 5-

அண்மையில் ஜாலான் துங்கு அப்துல் ரஹ்மானில் கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கத்துறை அதிகாரிகளும் ஒரு பலூன் வியாபாரியும் சம்பந்தப்பட்ட மோதல் தொடர்பில் போலீஸ் தயாரித்த 3 புலனாய்வு அறிக்கைகளுள் இரண்டு அறிக்கைகள் டிபிபி தரப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குற்றவியல் சட்டம் பிரிவு 325, பிரிவு 186 கீழ் இந்த இரண்டு புலன் விசாரணை அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டதாக புக்கிட் அமான் குற்றப் புலனாய்வுத்துறை இயக்குநர் டத்தோஸ்ரீ முகமட் சுஹாய்லி முகமட் ஸைன் கூறினார்.





அரசாங்கப் பணியாளர்களைக் கடமையாற்றுவதில் இருந்து தடுத்த குற்றம் தொடர்பிலும் தன்னிச்சையாக பலத்த காயம் விளைவித்தது தொடர்பிலும் இந்தப் புலன் விசாரணைகள் நடத்தப்பட்டதாக அவர் சொன்னார்.

இதற்கிடையே கிரிமினல் அச்சுறுத்தல் தொடர்பான வழக்கு குற்றவியல் சட்டம் பிரிவு 506 கீழ் விசாரிக்கப்படுகிறது. இது தொடர்பில் எம்சிஎம்சி தரப்பிடம் இருந்து பதில் அறிக்கைக்காக போலீஸ் காத்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புக்கிட் அமானில் நேற்று நடைபெற்ற நிருபர்கள் சந்திப்பில் அவர் இந்தத் தகவலைக் கூறினார்.